# சட்டப்பேரவையில் அமைச்சர் க.பொன்முடி பதிலுரை!...12ஆம் பக்கத் தொடர்ச்சி

வனப் பாதுகாப்பு, தீ மேலாண்மை, வன உயிரினங்கள் கணக்கெடுப்பு, வன உயிரினங்கள் பாதுகாப்பு மற்றும் மனிதவன உயிரின மோதலை தவிர்ப்பது குறித்து மாணவர்களுக்கு குறுகிய கால பயிற்சி அளித்து, இத்திட்டத்தின்மூலம் "இளம் 20,000 மாணவர்கள் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்கு "இளம் இயற்கை காவலர்கள்" என்ற சான்றிதழ் வழங்கப்படும்.

இத்திட்டத்திற்கான நிதி 3.00 கோடி ரூபாய் ஆகும்.

**5. சென்னை கடற்கரைக்கு கடல்சார் உயரடுக்கு படை உருவாக்கம் (மேசையைத் தட்டும் ஒலி)**

சுற்றுச்சூழல் உணர்திறன் கொண்ட கடல் பகுதிகளில் ரோந்து செல்வதற்கும், சட்டவிரோத கடல்வாழ் உயிரின வேட்டையைத் தடுப்பதற்கும், கடல்வளப் பாதுகாப்பை திறம்பட மேற்கொள்ளுவதற்கும் ஒரு கடல்சார் உயரடுக்கு படை சென்னையில் உருவாக்கப்படும்.

**6. வன உயிரின புத்தாக்க வளர் மையங்கள் அமைத்தல்!**

இது முக்கியமானது; குறிப்பாக விருதுநகர், கள்ளக்குறிச்சி, இராமநாதபுரம், நாகப்பட்டினம், நீலகிரி மற்றும் மேகமலை ஆகிய இடங்களில் வன உயிரின புத்தாக்க வளர் மையங்கள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அரியவகை வன உயிரினங்களைப் பாதுகாக்க மேலும் ஆறு வன உயிரின புத்தாக்க வளர் மையங்கள் விருதுநகர், கள்ளக்குறிச்சி, இராமநாதபுரம், நாகப்பட்டினம், நீலகிரி மற்றும் மேகமலை ஆகிய இடங்களில் அமைக்கப்படவுள்ளன.

**7. வன உயிரினப் பாதுகாப்பு மேம்பாட்டு அறிவியல் நிறுவனத்தில் இரண்டு புதிய ஆராய்ச்சி மையங்கள் அமைத்தல்!**

வன உயிரினப் பாதுகாப்பு மேம்பாட்டு அறிவியல் நிறுவனத்தில் இரண்டு புதிய ஆராய்ச்சி மையங்கள் 1.50 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

பாதுகாப்பு மற்றும் பரிணாம மரபியல் மையம் ஒன்றும், உயிர்வகை வாழ்வு மையம் ஒன்றும் சென்னை வண்டலூரில் உள்ள உயர்நிலை வன உயிரினப் பாதுகாப்பு நிறுவனத்தில் (AIWC) புதியதாக 1.50 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

**8. சேலம்குரும்பப்பட்டி மற்றும் வேலூர் அமிர்தி உயிரியல் பூங்கா மேம்பாடு!**

சேலம்குரும்பப்பட்டி மற்றும் வேலூர் அமிர்தி உயிரியல் பூங்கா மேம்பாடு செய்யப்படும்.

சேலத்திலுள்ள குரும்பப்பட்டி உயிரியல் பூங்கா, வேலூரிலுள்ள அமிர்தி உயிரியல் பூங்காவில் பார்வையாளர்களுக்கான வசதிகள் மற்றும் விலங்குகள் அடைப்புகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் 5.00 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

**9. குள்ளநரி பாதுகாப்புத் திட்டம்!**

குள்ளநரி பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்படும். சூழல் சமநிலையை உறுதிப்படுத்துவதில் பெரும்பங்கு வகிக்கும் குள்ளநரிகள் தற்போது அழிவின் விளிம்பில் உள்ளன. எனவே, இந்தக் குள்ளநரிகளைப் பாதுகாப்பதற்கென குள்ளநரி பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

**10. தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் நீர்நாய் ஆய்வு மற்றும் பாதுகாப்புத் திட்டம்!**

தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் நீர்நாய் ஆய்வு மற்றும் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

நீர்வாழ்வினமான நீர்நாய்கள் சூழல் சமநிலையை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் அதிகமாகக் காணப்படும் நீர்நாய்களின் வாழிடங்களை பாதுகாக்கவும், இனப்பெருக்கம் குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளவும் அவற்றின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான வழிமுறைகளை கண்டறியவும் 25.00 இலட்சம் ரூபாய் செலவில் நீர்நாய் ஆய்வு மற்றும் பாதுகாப்புத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

**11. பள்ளி மாணவர்களுக்கான சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முகாம்!**

மாணவப் பருவத்திலேயே இதுகுறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினால் நன்றாக இருக்கும் என்பதால், பள்ளி மாணவர்களுக்கான சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முகாம் நடத்தப்படும்.

வனம் மற்றும் இயற்கை பாதுகாப்பில் மாணவர்கள் விழிப்புணர்வு பெறும் வகையில், வனத் துறையின் மூலம் 1,000 இயற்கை முகாம்கள் 2.00 கோடி ரூபாய் செலவில் பள்ளி மாணவர்களுக்காக நடத்தப்படும்.

**12. கடல் ஆமை ஆய்வில் டெலிமெட்ரி தொழில்நுட்பம் பயன்படுத்துதல்!**

இதுகுறித்து நான் முதலிலேயே தெரிவித்தேன். கடல் ஆமை ஆய்வில் டெலிமெட்ரி தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும். இதுவொரு புதுமையான தொழில்நுட்பமாகும். கடல் ஆமைகளைப் பாதுகாப்பதற்காக இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

ஒவ்வோராண்டும் தமது இனப்பெருக்கக் காலத்தில் தமிழ்நாடு கடற்கரைக்கு அதிக எண்ணிக்கையில் கடல் ஆமைகள் வருகின்றன. இவற்றிற்கு ஏற்படும் பல்வேறு அச்சுறுத்தல்களைத் தவிர்க்கவும், கடல் ஆமைகளின் வாழ்க்கை முறை, அவை அதிக எண்ணிக்கையில் கூடுமிடங்கள் மற்றும் அவற்றின் பருவநிலை இடப்பெயர்ச்சி முறைகளைக் கண்டறியவும், டெலிமெட்ரி தொழில்நுட்ப ஆய்வுகள் 84.00 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

**13. ஆதிவனம் மேம்பாட்டுத் திட்டம்!**

சென்னை, மதுரை, சேலம், திருச்சி மற்றும் கோயம்புத்தூர் போன்ற பெருநகரங்களில் சுற்றுப்புறங்களில் உள்ள வனங்கள் நகர்மயமாதலால் பெருமளவில் சிதைவுக்குள்ளாகி உள்ளன. இவற்றை மீட்டெடுக்க ஆதிவனம் மேம்பாட்டுத் திட்டம் 2.00 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**14. பழங்குடியினர்பள்ளிகள் மேம்பாட்டுத் திட்டம்!**

பழங்குடி மாணவர்களுக்காக வனத் துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் தங்குமிடம், வகுப்பறை மற்றும் சுகாதாரமான குடிநீர் போன்ற அடிப்படை வசதிகள் 8.00 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**15. மனிதவன உயிரின மோதலைத் தவிர்க்க எஃகு கம்பி வேலி அமைத்தல்!**

கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள காவேரி வடக்கு வன உயிரினச் சரணாலய எல்லைப் பகுதியில் மனிதவன உயிரின மோதலைத் தவிர்க்க எஃகு கம்பி வேலி 31.00 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

இதுவொரு முக்கியமான அறிவிப்பாகும். யானைகள், கரடிகள் உள்ளிட்ட வன விலங்குகள் ஊருக்குள் வந்துவிடுவதால் ஏற்படும் பிரச்சினைகளைத் தவிர்க்க, வனஉயிரின மோதலைத் தவிர்க்க எஃகு கம்பி வேலி 31.00 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

**16. சந்தன மரம் மற்றும் ஈட்டி மரம் சாகுபடி மற்றும் வளர்ப்பை ஊக்குவித்தல்!**

உறுப்பினர்கள், சந்தன மரம், பூக்கள், பழங்கள் உள்ளிட்டவை குறித்து கேட்டார்கள்.

சந்தன மரம் மற்றும் ஈட்டி மரங்கள் பாதுகாக்கப்பட்ட அதிக மதிப்புள்ள மரங்களாகும். இவற்றை பொதுமக்கள் வளர்ப்பதை ஊக்குவிக்கவும், வளர்த்த மரங்களை அறுவடை செய்வதையும், விற்பனை செய்யும் நடைமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களை எளிமைப்படுத்துதல்.

**17. தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் பசுமைப் பரப்பை மதிப்பீடு செய்தல்!**

தமிழ்நாட்டில், மாநகரங்களின் நகரமைப்பு பெருந்திட்ட உருவாக்கத்தில் அத்தியாவசியமான மரங்கள் கணக்கெடுப்பு மற்றும் பசுமைப் பரப்பு குறித்த ஆய்வுகள், சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, திருப்பூர் மற்றும் சேலம் ஆகிய 6 மாநகரங்களில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**18. திண்டுக்கல் மாவட்டத்தில் யானைகள் நடமாட்டத்தை கண்காணிக்க சிறப்பு அதிவிரைவுப்படை!**

ஊரகத் தொழில் துறை அமைச்சர் இ. பெரியசாமி அவர்கள், பக்கத்தில் அமர்ந்துகொண்டு, எங்கள் ஊருக்குள் அடிக்கடி யானைகள் வந்துவிடுகின்றன. அதற்கு ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ளுங்கள் என்று அடிக்கடி கேட்டுக்கொண்டேயிருப்பார்கள். அந்தப் பகுதி மட்டுமல்ல, இது பல பகுதிகளிலுள்ள மக்களுடைய கோரிக்கையாகவும் உள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் யானைகளால் விவசாயிகள் பாதிப்படையாத வகையில், யானைகளின் நடமாட்டத்தை உடனுக்குடன் கண்காணித்து கட்டுப்படுத்த 20 நபர்களைக் கொண்ட ஒரு சிறப்பு அதிவிரைவுப்படை 1.00 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

**19. திண்டுக்கல் மாவட்டத்தில் வன எல்லைகளில் தொங்கும் சூரிய மின்வேலி அமைத்தல்!**

திண்டுக்கல் மாவட்டத்தில் கன்னிவாடி சரகத்தில் வன விலங்குகளால் விவசாய நிலங்களில் பாதிப்பு ஏற்படாமல் தடுப்பதற்கு வன எல்லைகளில் 1.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 20 கிலோ மீட்டர் நீளத்திற்கு தொங்கும் சூரிய மின் வேலி அமைக்கப்படும்.

தற்போது தொங்கும் சூரிய மின்வேலிகள் புதிதாக அமைப்பதற்கு வாய்ப்புகள் உருவாகியுள்ளன; அது அமைக்கப்படும். (குறுக்கீடு) திண்டுக்கல் மாவட்டத்திற்கு அவர் கேட்டிருந்தார்; கொடுத்திருக்கிறோம். இப்போது நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். உண்மையிலேயே அதுபோன்று இருக்குமேயானால், முதலமைச்சர் அவர்களிடம் கலந்தாலோசித்து, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். இவைதான், வனத் துறைக்கான அறிவிப்புகளாகும்.

**கதர் மற்றும் கிராமத் தொழில்கள்**

**1.கன்னியாகுமரி மாவட்டம், நாகர் கோவில், அம்சி தேன் பதப்படுத்தும் அலகில் உள்ள கட்டடம் புனரமைத்தல் மற்றும் தேன் இருப்பு கொள்கலன்கள் நிறுவுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ள ரூபாய் 40 இலட்சம் வழங்கப்படும்.**

**2. சேலம் மாவட்டம், குகையில் செயல்பட்டு வரும் காலணி அலகில் உள்ள கட்டடம் தொழிலாளர்கள் பணி செய்ய ஏதுவாக, காலணி பொலிவூட்டும் கூடம் (Buffing Chamber), ஆழ்துளை கிணறு உள்ளிட்ட அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளுடன் ரூபாய் 20 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.**

**3. மூன்று தளங்கள் கொண்ட சேலம் "அண்ணா பட்டு மாளிகை" வளாகத்தில் பொது மக்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் வசதிக்காக ரூபாய் 20 இலட்சம் செலவில் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.**

**4.திருச்சி மாவட்டம், சமயபுரம் சோப்பு அலகில் தானியங்கி சோப்பு ஸ்டாம்பிங் இயந்திரம் உள்ளிட்ட இயந்திரங்கள் ரூபாய் 10 இலட்சம் செலவில் நிறுவப்படும்.**

**5. நீலகிரி மாவட்டம், கோத்தகிரி பகுதியில் வசிக்கும் இருளர் மற்றும் குரும்பர் பழங்குடியின தேனீ விவசாயிகள் 100 பேருக்கு தேனீ வளர்ப்புப் பெட்டிகள் மற்றும் 5 குழுக்களுக்கு தேன் சேகரிக்கத் தேவையான உபகரணங்கள் ரூபாய் 4 இலட்சம் செலவில் வழங்கப்படும்.**

**6.தூத்துக்குடிதிருநெல்வேலி மாவட்ட பனைவெல்ல கூட்டுறவுச் சம்மேளனத்தின் கீழ் செயல்படும் ஆரம்ப பனைவெல்ல கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு பனங்கற்கண்டு, பனந்தும்பு மற்றும் பனை ஓலைப் பொருட்களை தயாரிப்பது குறித்த பயிற்சி மற்றும் உபகரணங்கள் ரூபாய் 31.86 இலட்சம் மதிப்பில் வழங்கப்படும்.**

நீங்கள் (பேரவைத் தலைவர்) இங்கு நிகழ்ச்சியை ஆரம்பிக்கிறபோதே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சில பேரை வெளியேற்றியிருக்கிறீர்கள். இப்போது சட்டமன்றத்திலிருந்து நீங்கள் அவர்களை வெளியேற்றியிருக்கிறீர்கள். நிச்சயமாக, தமிழகத்தை விட்டு, அவர்களை வெளியேற்றுவதற்கு தமிழகத்து மக்கள் தயாராக இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கெல்லாம் தமிழக முதலமைச்சர் அவர்கள், திராவிட மாடல் ஆட்சியை நடத்துகிற முதலமைச்சர் அவர்கள் செய்திருக்கிற பல்வேறு சிறப்பான திட்டங்கள்தான் காரணமாக இருக்கும். அதற்கு வருகிற 2026 சட்டமன்றப் பொதுத் தேர்தலிலே 234க்கு 234 லிலும் நாம் வெற்றி பெறுவோம் என்ற உணர்வோடு, (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கு முதலில் என்னுடைய உளமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் க.பொன்முடி உரையாற்றினார்.




அரியலூர் மாவட்டம் குன்னம் தொகுதி செந்துறை ஒன்றியத்தில் 100 நாள் வேலை உறுதித் திட்ட நிதியை வழங்காத ஒன்றிய அரசைக் கண்டித்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கண்டன முழக்கமிட்டார் உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன், ஒன்றியக் கழகச் செயலாளர் பூ.செல்வராஜ் மற்றும் மாவட்ட, ஒன்றிய, கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

100 நாள் வேலை உறுதித் திட்டத்திற்கு நிதி வழங்காமல்
தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய அரசைக் கண்டித்து

## தருமபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க சார்பில் கீழ்க்கண்டவாறு ஒன்றியங்களில் கண்டன ஆர்ப்பாட்டங்கள்!

## தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி எம்பி, அறிவிப்பு



தருமபுரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி, எம்.பி. வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

100 நாள் வேலை உறுதித் திட்டத்தின் (MGNREGA) மூலம் தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ.4034 கோடி நிதியை வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தி.மு.க. சார்பில் அனைத்து ஒன்றியங்களிலும் 29.3.2025 சனிக்கிழமை அன்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட வேண்டும் என்று தலைமை கழகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக தருமபுரி மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றியங்களில் கண்டன பொதுக்கூட்டம் கீழ்க்கண்ட அட்டவணைப்படி நடைபெறுகிறது.

| கழக ஒன்றியம் | தலைமை | முன்னிலை |
|---|---|---|
| நல்லம்பள்ளி கிழக்கு ஒன்றியம் : **நல்லம்பள்ளி பேருந்து நிலையம்** | **ஆ. மணி,** B.Com., B.L., M.P., தருமபுரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் | **A.S. சண்முகம்** ஒன்றிய செயலாளர்<br>**S.முத்துலட்சுமி** மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர்<br>**M.P.கவுதம்** தகவல் தொழில் நுட்ப அணி |
| **அதகப்பாடி ஊராட்சி** | **ஆர். சின்னசாமி** EX.MLA அமைப்பாளர் | **S.உதயசூரியன்** தகவல் தொழில் நுட்ப அணி<br>**கௌதம்** மாணவரணி துணை அமைப்பாளர்<br>**நாட்டான் மாது** நகர கழக செயலாளர்<br>**C. செல்வராஜ்** மாவட்ட அவை தலைவர்<br>**பத்மா** மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர்<br>**ஹரி விக்னேஸ்** மாவட்ட விளையாட்டணி அமைப்பாளர்<br>**N.ஸ்டாலின்** ஆதிதிராவிடர் நலக்குழு<br>**R. பசுவராஜ்** முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் |
| தருமபுரி மேற்கு ஒன்றியம்: **இலக்கியம்பட்டி ஊராட்சி** | **தடங்கம் பெ. சுப்ரமணி** EX.MLA மு.மாவட்ட கழக செயலாளர் | **D.L. காவேரி** ஒன்றிய செயலாளர்<br>**ஜி.அசோக்குமார்** மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்<br>**ரஹீம்** மாவட்ட.சி.பிரிவு அமைப்பாளர்<br>**காசிநாதன்** நெசவாளர் அணி அமைப்பாளர் |
| பென்னாகரம் தெற்கு ஒன்றியம்: **பருவதனஅள்ளி ஊராட்சி** | **PNP.இன்பசேகரன்,** EX.MLA மாநில விவசாய தொழிலாளர் அணி துணை தலைவர் | **மடம் க. முருகேசன் வீரமணி** பேரூர் கழக செயலாளர்<br>**வானவில் சண்முகம்**<br>**பூம்புகார் சின்னசாமி** |
| **பெரும்பாலை ஊராட்சி** | **பி.தருமசெல்வன்** முன்னாள் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் | **சோலை S.மணி** பொதுக்குழு உறுப்பினர்<br>**P.k. துரைசாமி** மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர்<br>**D. கார்த்திக்** மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்<br>**L.G.குமார்** விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் |
| **லளிகம் ஊராட்சி** | **N.S.கலைசெல்வன்** மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் | **L.D.பழனிசாமி** மா.தொண்டர் அணி அமைப்பாளர்<br>**R.P. முத்தமிழன்** மா.இளைஞரணி துணை அமைப்பாளர்<br>**L.D.ரங்கநாதன்** ஒன்றிய துணைசெயலாளர்<br>**புனிதம் பழனிச்சாமி** ஒன்றிய துணை செயலாளர்<br>**லதா பச்சியப்பன்** மு. ஒன்றிய செயலாளர்<br>**L.M.பொன்னுசாமி** மு. ஒன்றிய செயலாளர்<br>**பரிமளா மாதேஸ்வரன்** ஊராட்சி மன்ற தலைவர் |
| **ஒகேனக்கல்** | **எம்.இராமகிருஷ்ணன்** மாவட்ட மீனவரணி அமைப்பாளர் | **காளியப்பன்** மு.ஒ.செயலாளர்<br>**P.முருகன்** ஒன்றிய அவை தலைவர்<br>**A.P. பூவண்ணன், P.மோகன் இராமமூர்த்தி** கிளை செயலாளர்கள்<br>**மு.சஞ்சீத்** ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் |
| நல்லம்பள்ளி மத்திய ஒன்றியம் : **தொப்பூர் ஊராட்சி** | **கே. பி. மல்லமுத்து** ஒன்றிய செயலாளர் | **சரஸ்வதி துரைசாமி** மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்<br>**R.ஈஸ்வரன்** மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் |
| **பாளையம்புதூர் ஊராட்சி** | **R.ஆறுமுகம்** மாவட்ட துணை செயலாளர் வழக்கறிஞர். | **V.நடராஜன்** பொதுக்குழு உறுப்பினர் |
| பாலக்கோடு கிழக்கு ஒன்றியம்: **சோமனஅள்ளி ஊராட்சி** | **A. கருணாநிதி** ஒன்றிய செயலாளர் | **பொன்மகேஸ்வரன்** இலக்கிய அணி அமைப்பாளர்<br>**K.R.C. செல்வராஜ்** மாவட்ட இளைஞரணி து.அமைப்பாளர்<br>**ராஜா,சின்னசாமி,அன்பரசு** மாணவர் அணி துணை அமைப்பாளர்<br>**ஆசைதம்பி** |
| **மேக்னாம்பட்டி கூட்ரோடு** | **பூமணி** ஒன்றிய பொருளாளர் | **கந்தையா, சண்முகம், சங்கர், பிரபு வெங்கடேசன்** |
| நல்லம்பள்ளி மேற்கு ஒன்றியம்: **இண்டூர் ஊராட்சி** | **ரேணுகாதேவி** மாவட்ட துணை செயலாளர் | **P.வைகுந்தம்** ஒன்றிய செயலாளர்<br>**N.P.பெரியண்ணன்** மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர்<br>**எஸ்.விஜயன்** மாவட்ட ஓட்டுனர் அணி அமைப்பாளர்<br>**சி.கே.வேலு** ஒன்றிய அவைத் தலைவர் |
| **பண்டஅள்ளி ஊராட்சி** | **R.P. செந்தில்குமார்** மாநில சுற்றுச்சூழல் அணி துணை செயலாளர் | **வே.தங்கமணி** மாவட்ட பொருளாளர்<br>**M.G.S. வெங்கடேஸ்வரன்** மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்<br>**பெ. ராஜகோபால்** மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்<br>**N.பெருமாள்** மாவட்ட மருத்துவரணி அமைப்பாளர் |
| ஏரியூர் ஒன்றியம் : **ஏரியூர் ஊராட்சி** | **N.செல்வராஜ்** ஒன்றிய செயலாளர் | **வேலுமணி** மாநில பொதுக்குழு உறுப்பினர்<br>**P.பச்சமுத்து** ஒன்றிய அவைத்தலைவர்<br>**G.சம்பத்குமார்** ஒன்றிய துணை செயலாளர் |
| பென்னாகரம் வடக்கு ஒன்றியம் : **கிட்டம்பட்டி ஊராட்சி** | **வீரமணி** ஒன்றிய செயலாளர் | **வி.சண்முகம்** பேரூர் கழக செயலாளர்<br>**தவுலத்பாஷா** மாவட்ட சிறுபான்மை நலப்பிரிவு தலைவர் |
| **ஆலாமரத்துப்பட்டி ஊராட்சி** | **உமாசங்கர்** மாவட்ட து.செயலாளர் | **போர்வெல்.G.K.ராஜ், சி.கே. சரவணன்** ஒன்றிய அவைத்தலைவர்<br>**செல்வம்** கவுன்சிலர்<br>**சீனிவாசன்** ஒன்றிய பொறியாளர் அணி அமைப்பாளர் |

வழக்கறிஞர் **ஆ.மணி,** எம்.பி,
தர்மபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர்.